உ

முருகன் துணை.

குருபாததாசர் அவர்களால் செய்தருளிய

திருப்புல்வயல்

குமரேச சதகம்.

இஃது,

மணிமங்கலம்.

வடிவேலுமுதலியார் அவர்களால்

பரிசோதித்து.

மதுரை புதுமண்டபம் புஸ்தகஷாப்.

P. N. C. கடைகாரியம்

N. குருசாமிநாயுடு அவர்களால்

பிடாரித்தாங்கல்,

நாராயணசாமிமுதலியார் குமாரர்

சிதம்பரமுதலியாரவர்களது

வித்தியாரத்நாகர அச்சுக்கூடத்திற்


பதிப்பிக்கப்பட்டது.

1905.

சென்னை பிரம்பூர் குயப்பேட்டை 65-வது நெம்பர் வீடு.

விளம்பரம்.

சீர்மையிலிருந்து வரவழைக்கப்பட்ட



எங்களுடைய

ரோஜாப்பு மொட்டை

பரிட்சித்துப் பாருங்கள்



ரோஜாப்பு மொட்டு என்பது

ஒருஷோக்மோதிரம்.

இந்தமோதிரமானது அன்றுஅரும்பி இதழ்மலர்ந்த மொட்டை நடுவில் உடையதுபோல பிரகாசிக்கும் பார்வைக்கு மிக்கபகட்டாயும் சோபிதமாயுமிருக்கப்பட்ட 9-போலி ரவைகள் வைத்து இழைத்தது இது இங்லாண்டு கெமிகல்கோள்டு யென்னும் ஒருவித லோகத்தார்செய்து விராகனிடை 8-ரூபா விலையுடைய சுயத்தங்கத்தினால் மேற்பூசலும் பூசப்பட்டது. இந்தமோதிரத்தில் எண்ணை பட்டாலும் ஜலம்பட்டாலும்பளபளப்பு மங்குகிறதில்லை கொஞ்சம் காந்தி குறைந்தபோதிலும் சீமை சுண்ணாம்பு பூசிவைத்து புருஷினால் துடைத்து விட்டால் மறுபடியும் பிரகாசிக்கும் இந்தமோதிரத்திற்கும் ஜெனங்கள் 2,000 ரூபாய் விலையிருக்குமேயென்று மதிப்பிடுவதற்கு அஞ்சமாட்டார்கள்.—இதன் விலை 2 - ரூபாய்தான் வி. பி. தபாற்கூலி பிரத்தியேகம்.

8 - மோதிரத்திற்கு மல்பீஸ் இனாம்.

8 - எட்டு மோதிரங்கள் ஒரேதடவையில் வாங்குவோருக்கு நாணயமானதாய் (ஒரு பீஸ் சலவைமல்) அதாவது 20 - கெஜமுடையதான் இனாமாய் அனுப்பப்படும்.

4 - மோதிரத்திற்கு இனாம்.

4 - நாலு மோதிரம் ஒரேதடவையில் வாங்குவோருக்கு சரட்பட்டன் ஒருசெட்டு இனாமாய் அனுப்பப்படும்.

என்னுடையமுழுகேட்லாக் வேண்டுமானால் அரையணா ஸ்டாம்பு அனுப்பினால் அனுப்பப்படும்.

வித்தியாரத்நாகர அச்சுக்கூடத்தலைவர்

பி. நா. சிதப்பரமுதலியார்.

பெரம்பூர் பாரெக்ஸ் போஸ்டு மதராஸ்.

சிவமயம்.

குமரேசசதகம்.

காப்பு.

பூமேவுபுல்லைப் பொருந்துகும ரேசர்தம்மேல்
தேமேவியசதகஞ் செப்பவே—கோமேவிக்
காக்குஞ்சரவணத்தான் கம்பகும்பத்தைந்துகரக்
காக்குஞ்சரவணத்தான் காப்பு.

அவையடக்கம்.

மாரிக்குநிகரென்று பனிசொரிதல்போலவு மனைக்குநிகரென்றுசிறுபெண், மணல்வீடுகட்டுவது போலவுஞ்சந்திரன் மருவுமின் மினிபோலவும், பாருக்குணல்லோர்மு னேபித்தர்பலமொழி பகர்ந்திடுஞ்செயல்போலவும், பச்சைமயிலாடுதற் கிணையென் றுவான்கோழி பாரிலாடுதல்போலவும், பூரிக்குமினிய காவேரிக்குநிகரென்று போதுவாய்க்கால்போலவும், புகல்சிப்பிமுத்துக்கு நிகராப்பளிங்கைப் பொருந்தவைத்ததுபோலவும், வாரிக்குமுன்வாவி பெருகல்போலவுமின்சொல்வாணர்முனுகந்துபுல்லை, வாலகுமரேசர்மேற் சதகம்புகன்றனன்மனம்பொறுத்தருள்புரிவையே.

நூல்.

குமரேசர்மகிமை.

பூமிக்கோராறுதலை யாய்வந்துசரவணப் பொய்கைதனில்விளையாடியும், புனிதற்குமந்த்ரவுப தேசமொழிசொல்லியும் போதனைச்சிறையில்வைத்தும், தேமிக்கவரிகரப் பிரமாதிகட்குஞ் செயிக்கமுடியாவசுரனைத், தேகங்கிழித்துவடி வேலினாலிருகூறு செய்தமரர்சிறைதவிர்த்தும், நேமிக்குளன்பரிடருற்றசமயந்தனி நினைக்குமுன் வந்துதவியும், நிதமுமெய்த்துணையால்விளங்கலா லுலகினுனை நிகரானதெய்வமுண்டோ, மாமிக்கதேன்பருகு பூங்கடம்பணியுமணி மார்பனேவள்ளிகணவா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. க

அந்தணரியல்பு.

குறையாதகாயத்ரி யாதிசெபமகிமையுங் கூறுசுருதிப்பெருமையுங், கோதிலாவாகம புராணத்தின்வளமையுங் குலவுயாகாதி பலவும், முறையாநடக்கலாற் சகலதீவினைகளையு முளரிபோலேதகிப்பார், முதன்மைபெருசிலைசெம்பு பிருதுவிகளிற்றெய்வ மூர்க்கமுண்டாக்குவிப்பார், நிறையாகநீதிநெறி வழுவார்களாகையா னின்

இவர்க்கிது வில்லையெனல்.

வேசைக்குநிசமில்லை திருடனுக்குறவில்லை வேந்தற்குநன்றியில்லை, மிடியற்குவிலைமாதர் மீதுவங்கணமிலை மிலேச்சற்குநிறையதில்லை, ஆசைக்குவெட்கமிலைஞானியானவனுக்குளகமில்லைமூர்க்கன்றனக், கன்பில்லைகாமிக்கு முறையில்லைகுணமிலோற் கழகில்லைசித்தசுத்தன், பூசைக்குநவிலங்க சுத்தியிலைபாவுமுணர் புலவனுக்கபலோரிலை, புலவனுக்கென் றுமுசி தானுசிதமில்லைவரு புலைபர்க்கிரக்கமில்லை, மாசைத்தவிர்ந்தமதி முகதெய்வயானையொடு வள்ளிக்கிசைந்தவழகா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. ௧௦

இப்படிப்பட்டவரிவரெனல்.

நியாயநெறிதவறுமனுலகபரிபாலன நடத்துமவனேயரசனும், ராசயோசனைதெரிந் துறுதியாகியசெய்தி நவிலுமவனேமந்திரி, நேயமுடனேதன் சரீரத்தையெண்ணாத நிர்வாகியேசூரனும், நிலைபெறுமிலக்கண மிலக்கியமறிந்துசொலு நிபுணகவியேகவிஞனும், ஆயதொருவாகடந் தாதுவினிதானமு மறியுமுதியோன்வைத்திய, னகமின்றிமெய்யுணர்ந் தைம்புலனொழித்துவிட் டவனேமெய்ஞ்ஞானியெனலாம், மாயவர்சகோதரி மனோன்மணிக்கன்பான வரபுதரவடிவேலவா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. ௧௧

விரைந்தடக்கத்தகுவன விவையெனல்.

அக்கினியைவாய்மூந்து துர்ச்சனரைவஞ்சமனை யாளைவளர்பயிர்கொள்களையை, யஞ்சாவிரோதிகளையனியாயமுடையோரையகிர்த்தியப்பெண்களாப்பைக், கைக்கினியதொழிலாளி யைக்கொண்டவடிமையைக் களவுசெய்யுந்திருடரைக், கருதியவிசாரத்தையடக்கமில்பலிசையைக் கடிதானகோபந்தனை, மெய்க்கினிதலாப்பிணியை யவையுதாசினத்தை வினைமூண்டிடுஞ்சண்டையை, விஷமேறுகோரத்தையன்றடக்குவதலான் மிஞ்சவிடலாகாதுகாண், மைக்கினியகன்னிகுறவள்ளிதெய்வானையை மணஞ்செய்தபேரழகனே, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. ௧௨

இவர்க்கிது துரும்பெனல்.

தாராளமாகக் கொடுக்குந்தியாகிக டமக்குநற்பொருடுரும்பு, தன்னுயிரையெண்ணாத சூரனுக்கெதிராளி தளமெலாமொருதுரும்பு, பேரானபெரியருக் கற்பரதுகையினிற் பிரயோசனந்துரும்பு, பெரிதானமோட்சசிந் தனையுள்ளவர்க்கெலாம் பெண்போகமொருதுரும்பு, தீராதசகலமும் வெறுத்ததுறவிக்குவிறல் சேர்வேந்தனொருதுரும்பு, செய்யகலைநாமகள் கடாக்ஷமுள்ளோர்க்கெலாஞ் செந்தமிழ்க்கவிதுரும்பாம், வாராருமணிகொள்முலை வள்ளிதெய்வானையை மணம்புணரும்வடிவேலவா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. ௧௩

இதனை விளக்குவ திதுவெனல்.

பகல்விளக்குவதிரன் நிசிவிளக்குவதுமதி பார்விளக்குவது
மேகப், பதிவிளக்குவதுபெண்குடிவிளக்குவதரசு பரிவிளக்குவது
வேகப், இகல்விளக்குவதுவலி நிறைவிளக்குவதுநல மிசைவிளக்கு
வதுசுதியூ, ரிடம்விளக்குவதுகுடி யுடல்விளக்குவதுண்டி யினிய
சொல்விளக்குவதருள், புகழ்விளக்குவதுகொடை தவம்விளக்குவ
தறிவு பூவிளக்குவதுவாசம், பொருள்விளக்குவதுதிரு முகம்விள
க்குவதுநகை புத்தியைவிளக்குவதுநூல், மகம்விளக்குவதுமறை
சொல்விளக்குவதுநிசம் வாவியைவிளக்குவதுநீர், மயிலேறிவிளை
யாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. கச

பிறப்பிட நன்மையால் நன்மைபெருமை.

சிங்சாரவனமதி லுதிப்பினுங்காகமது தீஞ்சொல்புகல் குயி
லாகுமோ, திரையெறியும்வாவியிற் பூத்தாலுமேகொட்டி செங்க
ஞ்சமலராகுமோ, அங்கானகத்திற்பிறந்தாலுமுயலான தானையின்
கன்றாகுமோ, வாண்மையாகியநல்லகுடியிற்பிறந்தாலுமசடர்பெரி
யோராவரோ, சங்காடுபாற்கடல் பிறந்தாலுநத்தைதாஞ் சாலக்கி
ராமமாமோ, தடமேவுகடனீறி லேயுப்புவிளையினுஞ் சாரசர்க்க
ரையாகுமோ, மங்காதசெந்தமிழ்க் குருமுனிக்குபதேசம் வைத்த
மெஞ்ஞானகுருவே, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலை
மேவுகுமரேசனே. கரு

பலர்க்கும்பயன்படுவன.

கொண்டல்பொழிமாரியு முதாரசற்குணமுடையகோவுமூரு
ணியனீருங், கூட்டமிடும்பலத் தருதருவினீழலுங் குடியாளர்வி
வசாயமும், கண்டவர்களெல்லாம் வரும்பெருஞ்சந்தியிற் கனிபல
பழுத்தமரமும், கருணையுடனேவைத் திடுந்தண்ணீர்ப்பந்தலுங்கா
வேரிபோ லூற்றமும், விண்டலத்துறைசந்தி ராதித்தகிரணமும்வெ
குசனர்க்குபகாரமாம், வண்டமிர்கடப்பமலர் மாலையணிசெங்கள
ப மார்பனேவடிவேலவா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு
மலைமேவுகுமரேசனே. கசு

தாமழியினுங் குணமழியாதவை.

தங்கமானதுநிழலிநின் றுருகிமறிகினுந் தன்னொளிமழுங்கிடா
து, சந்தனக்குறடுதான் மெலிந்துதேய்ந்தாலுமோ பொலிவெண்
மை குறைவுறுது, போதவேகாய்ந்தநற் பால்குருகினாலும் பொரு
ந்துசுவைபோய்விடாது, துங்கமணிசாணையிற் றேய்ந்துவிட்டாலு
ந் துலங்குகுணமொளியாதுபின், தொன்மைதருபெரியோர் மடிந்
தாலுமவர்களது தூயநிறைதவறுகுமோ, மங்களகல்யாணிகுறமங்
கைசுரகுஞ்சரியை மருவுதிண்புயவாசனே, மயிலேறிவிளையாடு கு
கனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. கஎ

இருந்தும் பயன்படாதவை.

தருணத்திலுதவிசெய் யாதநட்பர்பிறந்தென பிறவாமலென்ன, தராதரமறிந்துமுறை செய்யாதமன்னரைச் சார்ந்தென்னநீங்கிலென்ன, பெருமையுடனுண்மையில் லாதவொருபிள்ளையைப் பெற்றெனபெறாமலென்ன, பிரியமாயுள்ளன்பிலாதவர்கணேசம் பிடித்தெனவிடுக்கிலென்ன, தெருளாகமானமில் லாதவொருசீவனஞ் செய்தெனசெயாமலென்ன, தேகியெனவருபவர்க் கீயாதசெல்வஞ் சிறந்தெனமுறிந்துமென்ன, மருவிளமைதன்னிலில் லாதகன்னிகைபின்பு வந்தெனவராமலென்ன, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (௨௬)

உபகாரமில்லாதவை.

கடல்நீர்மிகுந்தென்ன வொதிதான்பெருத்தென்ன காட்டிலவுமலரிலென்ன, கருவேல்பழுத்தென்ன நாய்பால்சுரந்தென்ன கானின்மழைபெய்துமென்ன, அடர்கழுதைலத்தைநில மெல்லாங்குவித்தென்ன வரியகுணமில்லாதபெண், அழகாயிருந்தென்ன வாஸ்தானகோழைபல வரியநூலோதிலென்ன, திடமினியபூதம்வெகு பொன்காத்திருந்தென்ன திரணமிகுங்கரடிமயிர்தான், செறிவாகிநீண்டென்னவஸ்த்ரபூஷணமெலாஞ் சித்திரத்துற்றுமென்ன, மடமிகுந்தெவர்க்குமுபசாரமில்லாத வம்பர்வாழ்வுக்குநிகராம், மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (௨௭)

பதரெனப்படுவோர்.

தன்பெருமைசொல்லினும் தன்னைப்புகழ்ந்தபதர் சமர்கண்டொளிக்கும்பதர், தக்கபெரியோர்புத்தி கேளாதபதர்தோழர் தம்மொடுகளிக்கும்பதர், பின்புகாணாவிடந் தன்னிலேபுரணிபல பேசிக்களிக்கும்பதர், பெற்றதாய்தந்தைதுயர் படவாழ்ந்திருந்தபதர் பெண்புத்திகேட்கும்பதர், பொன்பணமிருக்கவே போயிருக்கின்றபதர் பொய்ச்சாட்சிசொல்லும்பதர், புவியோர்நடத்தையை யிகழ்ந்தபதர் தன்மனைவி புணர்தல்வெளியாக்கும்பதர், மண்புணரும் வேசையுடன் விபசரிக்கின்றபதர் மனிதரிற்பதரென்பர்காண், மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (௨௮)

காணாவிடிற்றுயரப்படும் வகை.

இரவிகாணாவசன மாரிகாணாதபயி ரிந்துகாணாதகுமுதம், எந்தல்காணாநாடு கரைகள்காணாவோடமின்சொல்காணாவிருந்து, சுரபிகாணாதகன் றன்னைகாணாமதலை சோலைகாணாதவண்டு, தோழர்காணாநேயர் கலைகள்காணாதமான் சோடிகாணாதபேடு, குறவர்காணாதசபை தியாகிகாணாவறிஞர் கொழுநர்காணாதபெண்கள், கொண்டல்காணாதமயில் சிறுவர்காணாவாழ்வு கோடைகாணாதகுயில்கள், வரவுகாணாதசெல வினையெலாம்புவிமீதில் வாழ்வுகாணாவிளமையாம், மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (௨௯)

வியாதிமூலங்கள்.

கல்லினுன்மயிரினுன்மீதூண்விரும்பலாற்கருதியவிசாரத்தினு
ல்கடுவழிநடக்கையான்மலசலமடக்கையாற்பழங்கனியுண்ணலால்,
நெல்லினுலுமியினுலுண்டன்பின்மூழ்கலால் நித்திரைகளில்லாமை
யால், நீர்ப்பகையினுற்பனிக் காற்றினுலுடனேதலா நீடுசருகிலையூ
றலால், மெல்லிநல்லார்க்கல்வி யதிகமும்விரும்பலால் வீழ்மலஞ்சிக்
குகையினல், மிகுசுமையெடுத்தலா லிளவெயிற்காய்ந்தலான்மெய்
வாடவேலைசெயலால், வல்லிரவிலேதயிர்கள் சரகாதியுண்ணலால்
வன்பிணிக்கிடமென்பர்காண், மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீ
டுமலைமேவுகுமரேசனே.

செத்துஞ் சாகாதவர்.

அனைவர்க்குமுபகாரமாம்வாவிகூடமுண் டாக்கினேர்நீதிமன்
னர், அழியாததேவா லயங்கட்டிவைத்துளோரகரங்கள்செய்தபெ
ரியோர், கனையொப்பிலாப்புதல்வனைப்பெற்றபேர்பெருது சமர்வெ
ன்றசுத்தவீரர், தரணிதனில்நிலைநிற்கவென்ருளுமாறுததருமங்கள்
செய்தபேர்கள், கனவித்தைகொண்டவர்களோயாதகொடையாள
ர் காவியஞ்செய்தகவிஞர், கற்பினில்மிகுத்தவொரு பத்தினிமடந்
தையைக் கடிமணஞ்செய்தோர்களும், மனிதர்கள்சரீரங்கள் போ
கினுஞ்சாகாத மனிதரிவராகுமன்றே, மயிலேறிவிளையாடு குகனே
புல்வயனீடுமலைமேவுகுமரேசனே. (௯௧)

சாகாதிருந்துஞ் செத்தவர்.

மாறுதவருமையோர் தீராதபிணியாளர் வருமேவட்டகத்திலு
ண்போர், மனைவியைவழங்கியே சீவனஞ்செய்குவோர் மன்னமொ
ருராசசபையில், தூறுதநிந்தைசெய் திய்குவோர்சிவிகைகள் சுமந்
தேபிழைக்கின்றபேர், தொலையாவிசாரத் தழுந்துவோர்வார்த்தை
யிற் சோர்வுபடலுற்றபெரியோர், வீறுகமனையாடனக்கஞ்சிவந்தி
டு விருந்தினையொழித்துவிடுவோர், வீம்புடன்சொல்லாத விவகா
ரமதுகொண்டுமிக்கசபையேறுமசடர், மாறுதகவியெலாமுயிருட
ன்செத்தசவமாகியொளிமாய்வர்கண்டாய், மயிலேறிவிளையாடுகுக
னேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (௯௨)

சிறிதும் பயன்படாதவர்.

பதராகிலுங்கண விபூதிவிளைவிக்கும் பழமைபெறு சுவராகி
லும், பலருக்குமறைவாகு மாரிடுஞ்சிடுமேலம்பன்றிகட்குபயோகமா,
மதகமிகு டாவெனினி லுனதுபுவிகாக்குமவன் கழுதையும்பொதி
சுமக்கும், கல்லெனிற்றேவர்களுமாலயமுமாம்பெருந் தான்புற்றும
வர்மனைவியாம், இதமிலாச்சவமாகி லுஞ்சிலர்க்குதவிசெயுமிழிவு
றுகுரங்காயினும், இரககப்பிடித்தவற் குதவிசெயும்வாறுசேர் லே
ற்றமாலிகைவிளக்கும், மதயதுமிகும்பரம பலேபாரனுட்கார மற்
றொருவருக்குமுண்டோ, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடும
லைமேவுகுமரேசனே. (௯௩)

உலுத்தரியல்பு.

திரவியங்காக்குமொரு பூதங்கள்போற்பணந் தேடிப்புதைத்துவைப்பார், சீலநலமாகவுங் கட்டாற்கணல்லமுது செய்துண்ணறமுஞ்செய்யார், புகல்வர்செய்தண்டந்தனக்கும்வலுவாகப் புகுந்திருடருக்குமீவார், புலவரைக்கண்டவுட னோடிப்பதுங்குவார் புராணிகர்க்கொன் றுமுதவார், விரகறிந்தேபிள்ளை சோறுகறிதினுமளவில் வெகுபணஞ்செலவாகலால், விளையாடுமிழியனும் பிள்ளையேபிள்ளையெனமிகுச்செட்டிசொன்னகதைபோல்,வரவுபார்க்கின்றதேயல்லாதுலோபியர்கண் மற்றொருவருக்கீவரோ, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (௩௪)

திருவாழிடங்கள்.

கடவாரணத்திலுங் கங்காசலத்திலுங் கமலாசனந்தன்னிலும், காகுத்தன்மார்பிலுங்கொற்றவரிடத்திலுங் காளியின்கூட்டத்திலும், நடமாடுமயிரிலும்பொய்வார்த்தைசொல்லாத நல்லோரிடந்தன்னிலும், நல்லசுபலட்சண மிகுந்தமனைதன்னிலும் ரணசுத்தவீரர்பாலும், அடர்கேதனத்திலுஞ் சுயம்வரந்தன்னிலும் மருந்துளசிவிலவத்திலும், அலர்தருகருப்பமலர் தனிலுமுரதத்திலு மதிகருணரூப, மடவாரிடத்திலுங் குடிகொண்டுதிருமாது மாறாதிருப்பளன்றே, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (௩௫)

மூதேவிவாழிடங்கள்.

சோரமங்கையர்கணித முறையார்கள்வாயினிற் சூதகப்பெண் கணிழலிற், சூளையிற்சூழ்தலுரு புகையிற்களேபரஞ்சுடுபுகையில்நீசர்நிழலிர், காரிரவிலரசுநிழ லிற்கடாநிழலிலொடு கருதியவிளக்கு நிழலில், காமுகரினிஷ்டையில் லாதவர்முகத்திற் கடுஞ்சினத்தோர் சபையினில், ஈரமிலலாக்களர் நிலத்தினிலிராத்தயிரி லிழியுமதுபானர்பாலில், இலைவேல்விளாநிழலி னிதமழுக்கடையணையிலேனநாயகரகத்துள, வாரியமுரத்தூள பெருக்குதூண்மூதேவி மாறாதிருப்பளென்பர், மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (௩௬)

திருத்தினுந்திருந்தான்.

கட்டியெருவிட்டுச் செழுந்தேனைவார்க்கினுங் காஞ்சிரங்கைப்புவிடுமோ, கழுதையைக்கடிவைத் தோமம்வளர்க்கினுங் கதிபெருங்குதிரையாமோ, குட்டியரவுக்கமு தளித்தேவளர்க்கினுங் கொடுவிஷமல்லாதுதருமோ, குக்கநெடுவாலுக்குமட்டையைக்கட்டினுங்கோணுமலேநிமிருமோ, ஒட்டியேகுருணிமையிட்டாலும்நயமிலாயோனிகண்ணாகிவிடுமோ, பலவுகனகற்பூர வாடைபலகூட்டினுமுள்ளியின்குணமாறுமோ, மட்டிகட்காயிரம் புத்திசொன்னாலுநன் மார்க்கமறியாதைவருமோ, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (௩௭)

குறிப்பறிதல்.

மனதிற்கடும்பகை முகத்தினிலறியலா மானிலப்பூடுகளெலாம், மழையினாலறியலா நல்லார்பொல்லார்தமை மக்களாலறியலாகும், கனமருவுசூரரைச் சமரினாலரியலாங்கற்றவொருவித்துவானைக், கல்விப்பிரசங்கத்தினாலறியலாங்குணங் களைநடையினாலறியலாங், தனதகமுடுத்தது பளிங்கினாலறியலாஞ் ஜாதிசொல்லாலறியலாம், தருநீதிகேள்வியாலறியலாம்பிணிகளைத் தாதுக்களாலறியலாம், வனசவிகசிதவதன பரிபூரணானந்த வாலவடிவானவேலா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (௩௮)

குணமாறுமை.

குணமிலாதுஷ்டமிருகங்களையுநயகுணங் கொண்டுபடுத்திவிடலாம், கொடியபலவிஷநோய்களியாவையுமௌஷதமது கொடுத்துதிருப்பிவிடலாம், உணர்விலாப்பிரமராக்ஷசிமுதற்பேய்களையுகந்துகூத்தாடிவிடலாம், உபாயத்தினாற்பெரும் புறவைக்குநற்புத்தியுண்டாக்கலாமுயிர்பெறப், பிணமதையெழுப்பலா மக்சினிசுடாமற்பெரும்புனலெனச்செய்யலாம், பிணியையுமகற்றலாங் காலதூதுவரையும் பின்புவாவென்றுசொலலாம், மணலையுங்கயிராய்த் திரிக்கலாங்கயவர்குண மட்டுந்திருப்பவசமோ, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (௩௯)

இத்தீக்குணத்தோ ரிவ்விலங்குபோல்வதெனல்.

தான்பிடித்துத்துடிப் பென்றுமேலவர்புத்தி தள்ளிச்செய்வோர்குரங்கு, சபையிற்குறிப்பறிய மாட்டாமனின்றவர் தம்பயனிலாதமரமாம், வீம்பினாலெளியவரை எதிர்பண்ணிநிற்குமொரு வெறியற்குரைஞமலியாவார், மிகநாடிவருவோர்முகம்பார்த்திடாலோபர்மேன்மையில்லாதகழுதை, சோம்பலொடுபெரியோர் சபைக்குட்படுத்திடுந்தூங்கலேசண்டிக்கடா, சூதுகள்நடந்தோர்க் கிடுக்கணேசெய்திடுந் துஷ்டனேகொட்டுதேளாம், மாம்பழந்தனைவேண்டி எந்நாளிலீசனை வலமாகவந்தமுருகா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (௪௰)

அற்பர்வாழ் குணம்வேறுபடுதல்.

அற்பர்க்குவாழ்வுசற் றதிகமானால்விழிக்கியாவருருவுந்தோன்றிடா, தண்டிநின்றேநல்ல வார்த்தைகளுரைத்தாலு மவர்செவிக்கேறிடாது, முட்பகமானமேல்வருகினும்வாருமென் மொழியவும்வாய்வராது, மேதியேவாதப் பிடிப்புவர்ததுபோல முன்காலையகலவைப்பார், விற்பனமிகுந்தபெரியோர்செய்திசொன்னாலும் வெடுவெடுத்தேசிநிற்பார், விருதாபகத்துவப்பேயதுசவுக்கடிவிழும்போது தீருமென்பார், மற்புயந்தனிநீப மாலையணிலோலனே மார்பனே வடிவேலவா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (௪௧)

இத்தீங்குளோ ரிக்கோள்போல்வரெனல்.

அன்னைதந்தையர்புத்தி கேளாதபிள்ளையோ வஷ்டமச்சனியாகுவான், அஞ்சாமலெதிர்பேசி நிற்குமனையாள்வாக்கி லங்காரகச்சென்மமாம், தன்னைமிஞ்சிச்சொன்ன வார்த்தைகளோவடிமைசந்திராஷ்டகமென்னலாம், தன்பங்குதாவென்று சபையேறுதம்பியோசார்ந்தசன்மச்சூரியன், நன்னயமிலாதவஞ் சனைசெய்ததமையன்மூன்றுமிடத்தில்வியாழம், நாடோறு விரோதமிடு கொண்டோன்கொடுத்துளோன் ராகுகேதுக்களெனலாம், வன்னயனையன்றுசிறை தனிலிட்டுநம்பற்குமந்திரமுரைத்தகுருவே, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (௪௨)

நல்லினஞ் சேர்பயன்.

சந்தனவிருட்சத்தை யண்டிநிற்கின்றபல தருவுமவ்வாசனைக்கும், தங்கமகமேருவை யடுத்திடுங்காக்கையுஞ் சாயல்பொன்மயமேதரும், பந்தமிகுபாலுடன்விளாவியதணீரெலாம் பால்போனிறங்கொடுக்கும், படிகமணிகட்குளேநிகர்க்கின்றவடமுமப்படியேகுணங்கொடுக்கும், அந்தமிகுமரகதக் கல்லைத்தடித்திட லடித்ததும் பசுமையாகும், ஆனபெரியோர்களொடு சகவாசமதுசெயி லவர்கள்குணம்வருமென்பர்காண், மந்தரநெடுங்கிரியின் முன்கடல்கடைந்தவரிமருகமெய்ஞ்ஞானமுருகா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (௪௩)

வலியோரையு மூழ்விடாமை.

அன்றுமுடிசூடுவ திருக்கரகுராமன்மு னருங்காடுரைத்ததென்ன, அண்டரெல்லாமமுத முண்டிடப்பரமனுக் காலம்லபித்ததென்ன, வென்றிவருதேவர்சிறை மீட்டக்களவில்வே டிச்சியைச்சேர்ந்ததென்ன, மேதினிபடைக்குமய னுக்கொருசிரம்போகி வெஞ்சிறையிலுற்றதென்ன, என்றுமொருபொய்சொலா மன்னவன் விலைபோனதென்னகாண் வல்லமையினால், எண்ணத்திலொன்றும்வாராதுபரமசிவனெத்தனப்படிமுடியுமாம், மன்றுதனிநடனமிடுங் கங்காதரன்பெற்றவரபுத்ரவடிவேலவா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (௪௪)

பெரியோர்வாக்கிய பரிபாலனஞ்செய்தோர்.

தந்தைதாய்வாக்கியபரி பாலனஞ்செய்தவன்தசரதகுமாரராமன், தமையனருள்வாக்கியபரிபாலனஞ்செய்தோ தருமனுக்கிளையநால்வர், சிந்தையிலுணர்ந்துகுரு வாக்கியபரிபாலனஞ்செய்தவனரிச்சந்திரன், தேகியென்றோர்க்கில்லையெனுவாக்கியபாலனஞ்செய்தவன்றானகர்னன், நிந்தைதவிர்வாக்கியபரிபாலனஞ்செய்தவநீள்பெலமிகுந்தவனுமான், நிறைவுடன்பத்தாவின்வாக்கியபரிபாலன நிலத்தினளாகினிசெய்தாள், மந்தைவழிகோயில்தள முங்குலவுதும்பிமுகன் மகிழ்ந்தறவுகந்ததுணைவா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (௪௫)

முயற்சியின்மிக்கதூணெழல்.

வங்காளமேபுகினும் வாருகோலொருகாசுமட்டன்றியதிகமா
மோ, வானேறியுயரப் பறந்தாலுமூர்க்குருவி வண்ணப்பருந்தாகு
மோ, கங்காசலந்தனின் மூழ்கினும்பேச்சுரைக் காய்நல்லசுரையா
குமோ, கடலுக்குள்ளுழியை யமுக்கியேமொண்டிடிற் காணுமோ
நாழுழிதான், ஐங்காதமோடினுந் தன்வினைகடன்னே டடையலா
மநீங்கிவிடுமோ, ஆரிடஞ்சென்றாலும் வெகுதொலைகள்சுற்றினு ம
மைத்தபடியன்றிவருமோ, மங்காதசெந்தமிழ்கொண்டுநற்கீரர்க்கு
வந்ததுயர்தீர்த்தமுருகா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு
மலைமேவுகுமரேசனே. (௪௬)

இடும்பாலழிவு.

சூரபத்மன்பெலமு மிராவணன்றீரமுந் துடுக்கானகஞ்சன்வ
லியும், துடியானவிரணியன் வரப்பிரசாதங்களுந் தொலையாதவாலி
திடமும், பாரமிகுதுரியோத னதிநூற்றுவரது பராக்கிரமமதுனை
டவர், பாரிப்புமாபெலியு ணண்மையுஞ்சோமுகன் பாங்கிலுறுவ
ல்லமைகளும், ஏரணவுகீசகன் கனதையுந்திரிபுர ரெண்ணமுக்கந்
தநெறிலும், இவர்களதுசம்பத்து நின்றுதோவவரிடும் பாலழிந்த
வன்றோ, மாரனைக்கண்ணு லெரித்தவருள்சிவன்றந்த வரபுத்ரவடி
வேலவா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகும
ரேசனே. (௪௭)

நட்புநிலை.

மாமதியின்முயலான ததுதேயவழிந்தேய்ந்து வளருமப்போ
துவளரும், வாவிதனிலாம்பல்கொட் டிகளதனீர்வற்றினதுவற்றி
டும்பெருகிலுபருகும், பூமருவுபதல்பூடு கோடையிற்றீய்ந்திடும்பொ
ங்குகாலந்தழைக்கும், புண்டரிகமிரவிபோ மளவிற்குவிந்திடும்போ
துதயமாகின்சிறக்கும், மலருதேகம்முடலி லைக்கிலுயர்கூடவு மிளை
க்குமதுதேறிலுயிருஞ், சேர்ந்தோர்க்கிடுக்கனது வந்தாலுநல்லோர்
சினேகமப்படியாகுமே, வானகரூபமத யானைமுகனுக்கிளைய வால
குருபரவேலவா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவு
குமரேசனே. (௪௮)

கைப்பலனுமவை.

பருவத்திலேபெற்ற சேயும்புரட்டாசி பாதிசம்பாநடுகையும்,
பலமினியவாறுகனி வானைவால்போலவே வயிர்கொண்டுவருகரும
பு, கருணையொடுக்கநா ணயமுளோர்கையினிற் கடனிட்டுவைத்
தமுதலும், காலமதுநேரிற் றனக்குறுதியாகமுன் கற்றுணர்ந்திடு
கல்வியும், விருதாசரைக்கண்டு பழகியசினேகமும் விவேகிகட்குப
காரமாம், வீணல்லவிவையெல்லாங் கைப்பலனதாகவிபவிர்த்தியா
ய்வருமென்பர்காண், மருவுலாவியநீபமாலையும்புனைமார்பனே, மயி
லேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (௪௯)

இத்தீங்குளோ ரிக்கோள்போல்வரெனல்.

அன்னைதந்தையர்புத்தி கேளாதபிள்ளையோ வஷ்டமச்சனியாகுவான், அஞ்சாமலெதிர்பேசி நிற்குமனையாள்வாக்கி லங்காரகச்சென்மமாம், தன்னைமிஞ்சிச்சொன்ன வார்த்தைகளோவடிமைசந்திராஷ்டகமென்னலாம், தன்பங்குதாவென்று சபையேறுதம்பியோசார்ந்தசன்மச்சூரியன், நன்னயமிலாதவஞ் சனைசெய்ததமையன்மூன்றுமிடத்தில்வியாழம், நாடோறு விரோதமிடு கொண்டோன்கொடுத்துளோன் ராகுகேதுக்களெனலாம், வன்னயனையன்றுசிறை தனிலிட்டுநம்பற்குமந்திரமுரைத்தகுருவே, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (௪௨)

நல்லினஞ் சேர்பயன்.

சந்தனவிருட்சத்தை யண்டிநிற்கின்றபல தருவுமவ்வாசனைக்கும், தங்கமகமேருவை யடுத்திடுங்காக்கையுஞ் சாயல்பொன்மயமேதரும், பந்தமிகுபாலுடன்விளாவியதணீரெலாம் பால்போனிறங்கொடுக்கும், படிகமணிகட்குளேநிகர்க்கின்றவடமுமப்படியேகுணங்கொடுக்கும், அந்தமிகுமரகதக் கல்லைத்தடித்திட லடித்ததும் பசுமையாகும், ஆனபெரியோர்களொடு சகவாசமதுசெயி லவர்கள்குணம்வருமென்பர்காண், மந்தரநெடுங்கிரியின் முன்கடல்கடைந்தவரிமருகமெய்ஞ்ஞானமுருகா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (௪௩)

வலியோரையு மூழ்விடாமை.

அன்றுமுடிசூடுவ திருக்கரகுராமன்முனருங்காடுரைத்ததென்ன, அண்டரெல்லாமமுத முண்டிடப்பரமனுக் காலம்லபித்ததென்ன, வென்றிவருதேவர்சிறை மீட்டக்களவில்வே டிச்சியைச்சேர்ந்ததென்ன, மேதினிபடைக்குமய னுக்கொருசிரம்போகி வெஞ்சிறையிலுற்றதென்ன, என்றுமொருபொய்சொலா மன்னவன் விலைபோனதென்னகாண்வல்லமையினால், எண்ணத்தினாலொன்றும்வாராதுபரமசிவனெத்தனப்படிமுடியுமாம், மன்றுதனினடனமிடும் கங்காதரன்பெற்றவரபுத்ரவடிவேலவா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (௪௪)

பெரியோர்வாக்கிய பரிபாலனஞ்செய்தோர்.

தந்தைதாய்வாக்கியபரி பாலனஞ்செய்தவன்தசரதகுமாரராமன், தமையனருள்வாக்கியபரிபாலனஞ்செய்தோ தருமனுக்கிளையநால்வர், சிந்தையிலுணர்ந்துகுரு வாக்கியபரிபாலனஞ்செய்தவனரிச்சந்திரன், தேகியென்றோர்க்கில்லையெனுவாக்கியபாலனஞ்செய்தவன்றானகர்னன், நிந்தைதவிர்வாக்கியபரிபாலனஞ்செய்தவநீள்பெலமிகுந்தவனுமான், நிறைவுடன்பத்தாவின்வாக்கியபரிபாலன நிலத்தினளாகினிசெய்தாள், மந்தைவழிகோயில்தள முங்குலவுதும்பிமுகன் மகிழ்தறவுகந்ததுணைவா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (௪௫)

முயற்சியின்மிக்கதூணெழல்.

வங்காளமேபுகினும் வாருகோலொருகாசுமட்டன்றியதிகமா
மோ, வானேறியுயரப் பறந்தாலுமூர்க்குருவி வண்ணப்பருந்தாகு
மோ, கங்காசலந்தனின் மூழ்கினும்பேச்சுரைக் காய்நல்லசுரையா
குமோ, கடலுக்குணாழியை யமுக்கியேமொண்டிடிற் காணுமோ
நாணாழிதான், ஐங்காதமோடினுந் தன்வினைகடன்னோ டுடையலா
ம்நீங்கிவிடுமோ, ஆரிடஞ்சென்றாலும் வெகுதொலைகள்சுற்றினு ம
மைத்தபடியன்றிவருமோ, மங்காதசெந்தமிழ்கொண்டுநக்கீரர்க்கு
வந்ததுயர்தீர்த்தமுருகா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு
மலைமேவுகுமரேசனே. (௪௬)

இடும்பாலழிவு.

சூரபத்மன்பெலமு மிராவணன்றீரமுந் துடுக்கானகஞ்சன்வ
லியும்,துடியானவிரணியன் வரப்பிரசாதங்களுந் தொலையாதவாலி
திடமும், பாரமிகுதுரியோத னாதிநூற்றுவரது பராக்கிரமமதுனை
டவர், பாரிப்புமாபெலியு னண்மையுஞ்சோமுகன் பாங்கிலுறுவ
ல்லமைகளும், ஏரணவுகீசகன் கனதையுந்திரிபுர ரெண்ணமுக்கந்
தநெறிலும், இவர்களதுசம்பத்து நின்றுதோவவரிடும் பாலழிந்த
வன்றோ, மாரனைக்கண்ணா லெரித்தவருள்சிவன்றந்த வரபுத்ரவடி
வேலவா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகும
ரேசனே. (௪௭)

நட்புநிலை.

மாமதியின்முயலான ததுதேயவழிந்தேய்ந்து வளருமப்போ
துவளரும், வாவிதனிலாம்பல்கொட் டிகளதனீர்வற்றினதுவற்றி
டும்பெருகிலுபருகும், பூமருவுபதல்பூடு கோடையிற்றீய்ந்திடும்பொ
ங்குகாலந்தழைக்கும், புண்டரிகமிரவிபோமளவிற்குவிந்திடும்போ
துதயமாகின்சிறக்கும், மலருதேகம்முடலி லைக்கிலுயர்கூடவு மிளை
க்குமதுதேறிலுயிருஞ், சேர்ந்தோர்க்கிடுக்கனது வந்தாலுநல்லோர்
சினேகமப்படியாகுமே, வானகரூபமத யானைமுகனுக்கிளைய வால
குருபரவேலவா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவு
குமரேசனே. (௪௮)

கைப்பலனுமவை.

பருவத்திலேபெற்ற சேயும்புரட்டாசி பாதிசம்பாநடுகையும்,
பலமினியவாறுகனி வானைவால்போலவே வயிர்கொண்டுவருகரும்
பு, கருணையொடுகுக்கநா ணயமுளோர்கையினிற் கடனிட்டுவைத்
தமுதலும், காலமதுநேரிற் றனக்குறுதியாகமுன் கற்றுணர்ந்திடு
கல்வியும், விருதாசரைக்கண்டு பழகியசினேகமும் விவேகிகட்குப
காரமாம், வீணல்லவிவையெல்லாங் கைப்பலனதாகவபி விர்த்தியா
ய்வருமென்பர்காண், மருவுலாவியநீபமாலையும்புனைமார்பனே, மயி
லேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (௪௯)

சமயத்துக் குதவாதவை.

கல்லாது புத்தகந் தனிலெழுதிவீட்டினிற் கட்டிவைத்திடுவி த்தையும், காலங்களுக்குதவ வேண்டுமென்றன்கையிற்கொடுத்த பொருளும், இல்லாளைநீக்கியே பிறபாரிசதமென் றிருக்கின்றகுடி வாழ்க்கையும், ஏறுமாறாகவே தேசாந்தரம்போ யிருக்கின்ற பிள் ளைவாழ்வும், சொல்லானதொன்றும் வனமானதொன்றுமாச்சொ ல்லும்வஞ்சகர்நேயமும், சுகியமாயுண்டென் றிருப்பதுவெலாந்த ருணத்திலுதவாதுகாண், வல்லானகொங்கைமட மாதுதெய்வானை குறவள்ளிபங்காளநேயா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (ருய)

திரும்பமாட்டாதவை.

ஆடரவின்வாயினி லகப்பட்டதவளையு மாலைவாயிற்கரும்பும், அரிதானகப்பலிற்பாய்மரக்காற்றினி லகப்பட்டுமெலிகாக்கையும், நாட றியவேதாரை வார்த்துக்கொடுத்தது நமன்கைக்குளானவுயி ரும், நலமாகவேயணை கடந்திட்டவெள்ளமும் நாய்வேட்டைபட் டமுசலும், தேடியுண்பார் கைக்குளானமனையும் திரள்கொடுங் கோலரசர் கைத்தேருபொருளுந் திரும்பிவாரா தென்பர்காண், மாடமிசையன்னக்கொடித்திரள்சொல்சோனுடு வாழவந்திடுமுத ல்வனே, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரே சனே. (ருக)

இதினுமிதுநன்றென்பவை.

கடுகடுத்தாயிரஞ் செய்குவதிலின்சொலாக் களிகொண்டழை த்தனன்று, கனவேள்வியாயிரஞ் செய்வதிற்பொய்யுறை கருத் தொடுசொலாமைநன்று, வெடுக்கின்றதோரவி வேகியுறவினில் வி வேகியொடு பகைமைநன்று, வெகுமதிகளாயிரஞ் செய்வதிநரைக் காசு வேளைகண்டுதவுநன்று, சடுதியிற்பக்குவஞ் சொல்லுங்கொ டைக்கிங்கு சற்றுமிலையென்னனன்று, சம்பத்துடன்பிணியின்மெ லிகுவதினுயற்ற தாரித்திரியமிகநன்றுகாண், மடுவினிற்கரியோல மென்னவந்தருள்செய்த மால்மருகனைமுருகா, மயிலேறிவிளை யாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (ருஉ)

பலகூடினும் ஒன்றற்கீடாகாதவை.

தாரகைகளொருகோடி வானத்திருக்கினுஞ் சந்திரர்க்கீடாகு மோ, தாருவிற்கொடிதொனிகள் பலகூடினுமொரு தம்பட்டவோ சையாமோ, கோரமிகுபன்றியின் குட்டிபலகூடினொரு குஞ்சரக்க ன்றுகுமோ, கொட்டிமலர்வாவியிற் பலகூடினுமொரு கோசகமல ராகுமோ, பாரமிகும்மாமலைகள் பலகூடினுமொரு பைம்பொன்ம கமேருவாமோ, பலனிலாப்பிள்ளைக ளனேகம்பிறந்தும் விற்பன னொருவனுக்குநிகரோ, வாரணக்கொடியொரு கரத்திற்பிடித்தொ ன்றில் வடிவேலணிந்தமுருகா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வய னீடு மலைமேவுகுமரேசனே. (ருங)

அருமையறிதல்.

மணமாலையருமையைப் புனைபவர்களேயறிவர் பட்டிக்குரங்கறியுமோ, மக்களுடவருமையைப் பெற்றவர்களேயறிவர் மலடிதானறிவதுண்டோ, கணவருடவருமையைக் கற்பானமாதறிவள் கணிகையானவளறிவளோ, கருதுமொருசந்தியின் பாண்டமென்பதைவருங்களவானநாயறியுமோ, குணமானகிளியருமை தனைவளர்த்தவரறிவர்கொடியபூனையுமறியுமோ, குலவுபெரியோரருமை நல்லோர்களேயறிவர் கொடுமூடர்தாமறிவரோ, மணவாளநீயென்று குறவள்ளிபின்றொடர வனமூடுதழுவுமழகா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (௫௪)

தீச்சார்பாற் பயன்படாதவை.

மடுவினிற்சஞ்சலமுண்டொருவரணுகாமல் வன்முதலையங்கிருக்கும், மலையினிற்றேனுண்டு சென்றொருவர்கிட்டாமல் மருவியதில்வண்டிருக்கும், நெடுமைதிகழ்தாழைமலருண்டொருவரணுகாமல் நீங்காதமுள்ளிருக்கும், நீடுபசெந்தன விருக்ஷமுண்டணுகாது நீரளவுசூழ்ந்திருக்கும், குடிமக்கிவாழ்கின்றவீட்டினிற்செலாது குரைநாய்களங்கிருக்கும், கொடுக்குந்தியாகியுண்டிடையூறுசெய்யுங் கொடும்பாவியுண்டுகண்டாய், வடுமையுங்கடுமையும் பொருவமிருகண்ணிகுற வள்ளிக்குகந்தகணவா, மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (௫௫)

கணிகையரிழிவு.

தேவதாசிகள்வீடு சந்தைப்பெரும்பேட்டை சேர்ந்திடுபடுக்கைவீடு, தெருவாசல்கட்டிபொதுவம்பலமுடுத்ததுகில் செய்யகூதாடுசாலை, மேவலாகியகொங்கை கையாடுதிரள்பந்து விழிமனங்கவர்தூண்டிலாம், வாலாகியவல்குலோதண்டம் வாங்குமிடமதிசபடமாமனதுகல், அமிர்தவாயிதழ்சித்திர சாலையெச்சிற்குழி யவர்க்காசைவைக்கலாமோ, மாவடிவுகொண்டே யொளித்தவொருசூரனை வதைத்தவடிவேலாயுதா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (௫௬)

கலிகாலக்கொடுமை.

தாய்புத்திசொன்னால் மறுத்திடுங்காலமுயர் தந்தையைச்சீறுங்காலம், சற்குருவைநிந்தைசெய் காலமெய்க்கடவுளைச் சற்றுமெண்ணாதகாலம், பேய்தெய்வமென்றுபசரித்திடுங்காலம் புரட்டருக்கேற்றகாலம், பெண்டாட்டிவையினுங் கேட்கின்றகாலநற்பெரியோர்சொல்கேளாதகாலம், தேய்வுடன்பெரியவன் சிறுமையுறுகாலமிகு சிறியவன்பெருகுகாலம், செருவில்விட்டோடினோர் வரிசைபெறுகாலம்வசைசெப்புவோர்க்குதவுகாலம், வாய்மதம்பேசிவிடுமனியாயகாரர்க்குவாய்த்தகலிகாலமையா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (௫௭)

அவரவர்க்குரியவை.

கல்வியொடுகனமுறச் சபையின்மேல்வட்டமாய்க் காணவைப்போன்பிதாவாம், கற்றுணர்ந்தேதனதுபுகழாற்பிதாவைப் பிரகாசஞ்செய்வோன்புத்திரன், செல்வமிகுகணவனேதெய்வமென்றனுதினஞ்சிந்தைசெய்பவள்மனைவியாம், சிநேகிதன்போலவேயன்புவைத்துண்மைமொழிசெப்புமவனேசோதரன், தொல்வளமிகுந்தநூற் கரைதெரிந்துறுதிமொழி சொல்பவனேகுரவனாம், சொன்னநெறிதவறாமல் வழிபாடுசெய்துவரு துய்யனேயினியசீஷன், வல்விரகமிஞ்சுசுர குஞ்சிறியுடன்குறவர் வன்சிறைமணந்தகணவா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (௫அ)

சிறுமையிற்பெருமை.

சேற்றிற்பிறந்திடுங் கமலமலர்கடவுளது திருமுடியின்மேலிருக்கும், திகழ்சிப்பியுடலிற் சனித்தமுத்தரசனது தேகத்தின்மேலிருக்கும், போற்றியிடுபூச்சியின் வாயினால்பட்டென்று பூசைக்குநேசமாகும், புகலரியவண்டெச்சிலானதேன்தேவர்கொள் புனிதவபிஷேகமாகும், சாற்றியபுலாலொடு பிறந்தகோரோசனை சவாதுபுழுகனைவர்க்கமாம், சாதியீனத்திற் பிறக்கினுங்கற்றோர்கள் சபையின்மேல்வட்டமன்றோ, மாற்றிச்சுரத்தினை விபூதியாலுடல்குளிரவைத்தமெஞ்ஞானமுதலே, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (௫௯)

செய்யத்தகாதவை.

தானாசரித்துவரு தெய்வமிது வென்றுபோய்ச் சத்தியஞ்செயில்விடாது, தன்வீட்டிலேற்றிய விளக்கென்றுமுத்தந் தனைக்கொடுத்தாலதுசுடும், ஆனாலுமேவலர்கண் மெத்தவுந்தனதென் றடாதுசெயிற்கெடுதியாகும், ஆனைதான்மெத்தப் பழக்கமானாலுஞ்செயாதுசெய்தாற்கொன்றிடும், தீனானதினிதென்று மீதூண்விரும்பினாற் பீடைகளேதரும், செகராசதனுவென்ன வேலாதகாரியஞ்செய்தான்மனம்பொறார்காண், வானாடுபுகழுமொரு சோணாடுதழையவண் வந்தவதரித்தமுதலே, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (௬௰)

நடுவுநிலைமை.

வந்தவிவகாரத்தி லினியபரிதானங்கள் வருமென்றுநேசமென்றும், வன்பகைஞரென்றுமய லோரென்றுமிக்கதன வானென்றுமேழையென்றும், இந்தவகையைக்குறித் தொருபக்ஷபாதமோரெவ்வளவுரைத்திடாமல், எண்ணமுடனேலிகித புத்தியொடுசாக்ஷிக்குமேற்கச்சபாசமதமா, முந்தவிருதலையுஞ் சமன்செய்தகோல்போன் மொழிந்திடிற்றர்மமதுகாண், முனைவீமனுடல்பாதி மிருகந்தனக்கென்று முன்றருமர்சொன்னதலவோ, மைந்தனென்ன த

ன் றுமை முலைப்பால்கொடுத்திட வளர்ந்தருள் குழந்தைவடிவே,
மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே.

பக்ஷபாதம்.

ஓரவிகவாரமாய் வந்தவர்முகம்பார்த் துரைப்போர்மலைக்கு
ரங்காம், உயர்வெள்ளெருக்குடன் முளைத்துவிடுமவரில்ல முறை
யுமூர்பாழ்நத்தமாம், தாரணியிலிவர்களிலை நெல்லியிலைபோலுருகு
ம் சமானமாவெழுபிறப்பும், சந்ததியிலாதுழல்வ ரவர்முகத்தினின்
மூத்த தையலேகுடியிருப்பாள், பாரமிவனென்றுபுவி மங்கையுநடு
ங்குவள்பழித்ததுர்மரணமாவார், பகர்முடிவிலேரவுர வாதிநரகத்
தனுபவிப்பரெப்போதுமென்பார்,வாரமுடனருணகிரிநாதருக்கநு
பூதி வைத்தெழுதியருள்குருபரா, மயிலேறிவிளையாடு குகனேபுல்
வயனீடு மலைமேவுகுமரேசனே. (௬௨)

ஒன்றிலாமையாற் சிறவாதவை.

கொங்கையில்லாதவட் கெத்தனைப்பணியுடைமை கூடினும்பெ
ண்மையில்லை, கூறுநிறைகல்வியில் லாமலெத்தனைகவிதை கூறினும்
புலமையில்லை, சங்கையில்லாதவர்க் கெத்தனைவிவேகந் தரிக்கினுங்
கனதையில்லை, சட்சுவைபதார்த்தவகை யிற்றுநெய்யிலாச் சா
தமுந்திர்ப்தியில்லை, பங்கயமிலாமலெத் தனைமலர்கள்வாயிற் பாரி
த்துமேன்மையில்லை, பத்தியில்லாமல்வெகு நியமமாயர்ச்சனைகள்ப
ண்ணினும்பூசையில்லை, மங்கையரிலாமனைக் கெத்தனையருஞ்செல்
வம் வரினுமில்வாழ்க்கையில்லை, மயிலேறிவிளையாடு குகனேபுல்வ
யனீடு மலைமேவுகுமரேசனே. (௬௩)

அளவுபடாதவை.

வாரியாழத்தையும் புனலெறியமணலகளையு மானிடர்கள்சன
னத்தையும், மன்னவர்கணினைவையும் புருஷர்யோகங்களையும் வா
னினுயர் நீளத்தையும், பாரியெழுமணலையும் பலபிராணிகளையும் ப
டியாண்டமன்னவரையும், பருபதத்தின்னிறையு மீசுரச்செயலையு
ம் பனிமாரிபொழிதுளியையும், சீறியதமிழ்ப்புலவர் வாக்கிலெழுக
வியையுஞ் சித்தர்தமதுள்ளத்தையும், தெரிவையர்கள் சிந்தையை
யு மிவ்வளவெனும்படி தெரிந்தளவிடக்கூடுமோ, வாரிசமடந்தை
குடி கொண்டநெடுமாலுக்கு மருகனேவந்தமுருகா, மயிலேறிவி
ளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (௬௪)

பிறர்மனை நயத்தல்.

தந்தாரமின்றியே பரதாரமேநினைவு தனைவைத்தகாமுகர்க்கு
த், தயையில்லைநிசமில்லை வெட்கமிலைசமரினிற் தைரியஞ்சற்றுமில்
லை,அந்தாரமில்லைதொடர் முறையிலைநிலையில்லை யறிவில்லை மரமில்
லை, யரமில்லை நிதியில்லையிரவினிற்றனிவழிக்கிச் சமோமனதிக்கலில்
லை,நாதாந்தசனமில்லை யினமில்லை யெவருக்குநட்பில்லை கனதையில்
லை, நயமில்லையிளமைதனின் வலிமையிலைமுதிபெரு ஞானமிலையெ

ன்பர்சண்டாய், மந்தாரபரிமள சுகந்தாதிபுனையுமணி மார்பனேயருளாளனே, மயில்மேலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (௬௫)

மானம்விடாமை.

கனபாரமேறிற் பிளந்திடுவதன்றியே கற்றூண்வளைந்திடாது, கருதலர்களாலுடைந் தாலுமுயிரளவிலே கன்மறினமுறியான, திண்மையாரிடுக்கண்வந் துற்றாலும்வேங்கைதோல் சீவனளவிற் கொடாது, திரமானபெரியோர் சரீரங்கள்போகினுஞ் செப்புமுறைதவறிடார்கள், வனமேறுகவரிமானுயிர்போகுமளவுந்தன் மயிரினொன்றுங்கொடாது, வாராதவாபத்து வருகினுங்கற்புடைய மாதுநிறைதவறிநடவாள்மனதாரவுன தடைக்கலமென்றனற்கீரற்குவன்சிறைதவிர்த்தமுருகா, மயில்மேலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (௬௬)

திருவருட்சிரப்பு.

திருமகள்கடாட்சமுண் டானவெவர்க்குஞ் சிறப்புண்டுகனதையுண்டு, சென்றவழியெல்லாம் பெரும்பாதையாய்விடுஞ் சொல்லாதவார்த்தைசெல்லும், பொருளொருதுரும்பு மரியாதையாஞ் செல்வமோபுல்பெறுக்காறுபோலாம், புவியின்முன்கண்டுமதியாதவர்பழகினவர்போலவேநேசமாவார், பெருமையொடுசாதியிலுயர்ச்சியுமனுதினம் பேரும்பிரதிஷ்டையுண்டாம், பிரியமொடுபகையாளர் கூடவுறவாகுவான்பேச்சினிற்பிழைவராது, வருமெனநினைத்தபொருள்கைகூடிவருமதிகவல்லமைகண்மிகவுமுண்டாம், மயில்மேலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (௬௭)

நட்புநிலை.

கதிரவனுதிப்பதெங் கேநளினமெங்கே களித்துளமலர்ந்ததென்ன, கார்மேகமெங்கே பசுந்தோகையெங்கே கருத்தினட்பானதென்ன, மதியமெங்கேபெருங் குமுதமெங்கேமுக மலர்ந்துமகிழ்கொண்டதென்ன, வல்லிரவுவிடிவதெங்கேகோழியெங்கே மகிழ்ந்துகூவிடுதலென்ன, நீதியாரெங்கேயிருந்தாலுமவர்களொடுநேசமொன்றாயிருக்கும், நீதம்குநல்லோர்களெங்கிருந்தாலுமவர் நிறைபக்ஷமாவார்களாண், மதிலுடன்கோபுரமும் வாவியும்புடைசூழ மருவுஞ்சோணாட்டதிபனே, மயில்மேலேறிவிளையாடு குகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே. (௬௮)

காலமறிதல்.

காலம்பகர்காலம் வென்றிடுங்கூகையைக் கனகமுடியரசர்தாமும், கருதுசயகாலமது கண்டந்தவேளையிற் காரியமுடித்துவிடுவார், மேகமுங்கார்கால மதுகண்டுபயிர்விளைய மென்மேலுமாரிபொழியும், மிக்கானறிவுள்ளோர் வருதருணகாலத்தின் மிடியாளருக்குதவுவார், நாகரிகமுறுகுயில் வசந்தகாலத்திலே நவமெனக்கந்துகூவும், நலமேலோர்க்குறிததைப் பதராமலந்தநாளையின்முடிப்பாகண்டாய், வாகனையகாலைகள் மலைபுல்லெனுமுலக வாடிக்கைநிசமல்லவோ, மயில்மேலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (௬௯)

இடனறிதல்.

தரைதனிலோடுதேர் நீள்கடலிலோடுமோ சலதிமிசையோடு கப்பல், தரைமீதிலோடுமோ தண்ணீரிலுருமுதலைதன்முனே கரிநிற்குமோ, விரைமலர்முடிப்பரமர் மேனியரவினைவெல்லமிகுகருடனாலாகுமோ, வேங்கைகளிருக்கின்ற காடுகளிலஞ்சாமல் வேறொருவர் செல்லவசமோ, துரைகளைப்பெரியோரை யண்டிவாழ்வோர்தமைத் துஷ்டர்பகையென்னசெய்யும், துணைகண்டுசேரிட மறிந்துசேரென்றளவைசொன்னகதைபொய்யல்லவே, வகையூதுமாயனை யெடுத்தலாற்பஞ்சவர்கள் வன்போர்செயித்ததன்றோ, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (எ0)

யாக்கைநிலையாமை.

மனுநன்மாந்தாதாமு னனவர்களெல்லாரு மண்மேலிருந்துவாழ்ந்து, மடியாதிருந்தபே ரில்லையவர்தேடியதை வாரிவைத்தவருமில்லை, பனியதனைநம்பியே யேர்பூட்டு கதையென்ப பாழானவுடலைநம்பிப், பார்மீதிலின்னம்வெகு நாளிருப்போமென்று பலகோடி நினைவையெண்ணி, அனீதமாய்விருதாவின் மாய்வதேயல்லாமலன் பாகநின்றதெவர்கள், யர்ச்சித்துமுத்திபெறல் வேண்டுமென்றெண்ணார்க ளாசைவலையிற்சுழலுவார்; வனிதையர்கள்காம விகாரமேபகையாகு மற்றுமொருபகைமையுண்டோ, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (எக)

வெட்கத்திகழ்ச்சி.

வேட்டகந்தன்னிலே மருகன்வந்திடுமளவின் மேன்மேலுமுபசரித்து, விருந்துகள்சமைத்துநெய் பாற்றயிர்ப்தார்த்தவகை வேண்டுவவெலாமமைப்பார், ஊட்டமிகுவர்க்கவகை செய்திடுவர்தைலமிட்டுறுதியாய்முழுகிவிப்பார், ஓயாதுதின்னவே பார்க்கிலைகொடுத்திடுவருற்றநாணாலாகிலோ, நாட்டமொருபடியிறங் குவதுபோன்மரியாதைநாளுக்குநாள்குறைவுறும், நகைசெய்வர்மைத்துனர்களுவல்பார்போவென்று நாணுமன்மாமிசொலுவாள், வாட்டமனையாளொரு துரும்பாய்மதிப்பவன் மட்டியிலுமட்டியன்றோ, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (எஉ)

செல்வநிலையாமை.

ஓடமிடுமிடமது மணற்சுடுஞ்சுடுமிட முகமோடமிகவேநடக்கும், உற்றதோராட்டின்மடு மேடாகுமேடெலாம் முறுபனல்கொண்டுமடுவல்லிடும், நாடுகாடாகுமுகர் காடுநாடாகிவிடு நவிசடுமேல்கீழதாய், நடையூறுசந்தைபல கூடுமுடனேகலைம நன்னிலவுமிருளாய்விடும், நீடுபகல்போய்பின் பிறவாகுமிறவுமோர்நிலைப்பகம்பேர்தாய்விடும், நிதியோர்மிடித்திடுவர் செழித்திடுவர்நிசமல்ல வாழ்வுகண்டாய், மாடுமனுபாரிசன மகாணிதிபூஷணமுமருவுகனவாகுமன்றோ, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (எ௩)

பிறந்தாற்பெறுபேரு.

சடமொன்றெடுத்தாற் புவிக்குநல்லவனென்று தன்பேர்விளங்கவேண்டும், சதிருடனில்லாது மெய்ஞ்ஞானியென்றவதரிக்கவேவேண்டுமல்லால், திடமினியரணசூர வீரனிவனென்னவே திசைமெச்சவேண்டுமல்லால், தேகியென்பவருக் கில்லையென்னுமலே செய்யவும்வேண்டுமல்லால், அடைவுடன்பலகல்வி யாராய்ந்துவித்துவானாகவேண்டும், அறிவானதுரைமக்களாகவரவேண்டுமிவரதிகபூபாலரையா, வடகுவடுகிடுகிடெனஎழுகடலுமலையெறியமணியுரகன்முடிகணெறிய, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (௭௪)

வேசைநிந்தை.

தேடித்தம்வீட்டிற் பணக்காரர்வந்திடிற் றேகசிவன்போலவே, சினேகித்தவும்மையொருபொழுதுகாணாவிடிற் சொல்லுருதன்னமென்றே, கூடிச்சுகிப்பரென் னாசையுன்மேலென்று கூசாமலாணையிடுவார், கொங்கையைவெடிக்கப் பிடிக்கக்கொடுத்திகழ் கொடுப்பார்சும்பனமுகப்ப, வேடிக்கைபேசியேகைமுதல்பறித்தபின் வேறுபடநிந்தைசெய்து, விடவிடப்பேசுவார் காயகலமூட்டியே விட்டுத்துரத்திவிடுவார், வாடிக்கையாயிந்த வண்டப்பரத்தையர் மயக்கத்தைநம்பலாமோ, மயிலேறுவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (௭௫)

இதற்கிது உறுதியெனல்.

கைக்குறுதிவேல்வின் மனைக்குறுதிமனையாள் கவிக்குறுதிபொருளடக்கம், கன்னியர்தமக்குறுதி மனையாள்கவிக்குருதிகண்டிடிற் சத்யவசனம், மெய்க்குறுதிமுன்பின் சபைக்குறுதி வித்வசனம் வேசையற்குறுதிதேடல், விரகருக்குருதிபெண்மூப்பினுக்குறுதியூண்வீரனுக்குறுதிதீரம், செக்குறுதினீரரும்பார்க்குறுதிசெங்கோல்செழிப்படைகுறுதிமேவழம், செல்வந்தனக்குறுதி பிள்ளைகண்கர்க்குருதிசேர்ந்திடும்சர்ச்சனர்களாம், மெக்குறுதியாகி விழிக்குறமடந்தை சுரமங்கைமருவுந்தலைவனே, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (௭௬)

வறுமையிற்சிறுமை.

வறுமைதான்வந்திடிற் றப்பழுதுசொல்லுவாள் மனையாட்டிசற்றுமெண்ணாள், வாக்கிற்பிறக்கின்ற சொல்லெலாம்பொல்லாதவசனமாய்வந்துவிளையும், சிறுமையொடுதொலையா விசாரமேயல்லாது சிந்தையிற்றைரியமில்லை, செய்யசபைதன்னிலே சென்றுவரவெட்கமாஞ்செல்வரைகாணினும், உறுதிபெருவீரமுங் குன்றிடும்விருந்துவரி னுயிருடன்செத்தபிணமாம், உலகம்பழித்திடும்பெருமைபோர்முன்புசென் றொருவரொடுசெய்திசொன்னால், மறுவசனஞ்சொலாமுன்பினிற்றுன்பமிது வந்தணிகிடாதருளுவாய், மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (௭௭)

தீச்சார்பானன்மையிழப்பு.

ஆனைதண்ணீரினிழல் பார்த்திடத்தவளைசென் றங்கேகலக்கியுலவும், ஆயிரம்பேர்கூடிவீடுகட்டிடிலேத மறைகளுமுடனேவரும், ஏனைநற்பெரியோர்கள்போசனஞ்செயுமளவிலீக்கிடந்திசைகேடதாம், இன்பமிகுபகலிலேகன் றுசென்றாட்டுதற்கினியகேனதுதடுக்கும், சேனைமன்னவரென்ன கருமஙியமித்தலுஞ் சிறியோர்களாற்குறைபடும், சிங்கத்தையும்பெரிய ரிஷபத்தையும்பகைமை செய்ததொருதரியல்லவோ, மானையுந்திகழ்தெய்வயானையுந்தழுவுமணிமார்பனேயருளாளனே, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (எஅ)

இடையூற்றும் பயன்படுவை.

ஆறுதண்ணீர்வற்றி விட்டாலுமுற்றிநீர் முதுபானற்கொடுக்கும், ஆதவனையொருபாதி கட்செவிமறைத்தாலு மப்போதுமுதவிசெய்வன், கூறுமதிதேய்பிறை தாகவேகுறையினுங் குவலயத்திருள்சிதைக்கும், கொல்லைதான்சாவிபோய் விட்டாலும்மங்குவறுகுருவிக்குமேச்சலுண்டு, வீறுடனுதாரன்மிடி யானபோதியான்போதில் மிகநாடிவருபவர்க்கு, வேறுவகையில்லையென் றுரையாதினன்றள வியந்துளபகிழ்ந்துதவுவான், பாறுபடுசூரகங்காரகம்பீரனே வடிவேலணிந்தமுருகா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (எகூ)

இன்னவர்க்கிது வில்லையெனல்.

சார்பிலாதவருக்கு நிலையேதுமுதலிலா தவருக்குலோபமேது, தயையிலாதவர்தமக்குறவேதுபணமிலாதார்க்கேதுவேசையுறவு, ஊரிலாதவர்தமக் கரசேதுபசிவேளையுண்டிபாற்குருதிநிலையே, துண்மையிலாதவற் கரமேதுமுயல்விலார்க் குறுவதொருசெல்வமேது, சோர்விலாதவருக்கு மற்றுமொருபயமேதுசுகமிலாற்காசைபேது, துற்குணமில்லாதவர்க் கெதிராளிபேதிடர்செய் துஷ்டர்க்கிறக்கமேது, மார்பருவவாலிமேல் வஸ்திரம்விடுத்தநெடு மால்மருகனைமுருகா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (அ0)

இதினுமிதுநன்றெனல்.

பஞ்சரித்தருவையறிவார்பொருளைசெய்தலிற் பலர்மனைப்பிச்சைநன்று, பரிவாகவுபசார மில்லாவிருந்தினிற் பட்டினியிருக்கைநன்று, தஞ்சவொருமுயலையடு வென்றுதனில்யானையொடு சமர்செய்துதோற்றனன்று, சரசகுணமில்லாத பெண்களைச்சேர்தலிற் சன்னியாசித்தனன்று, அஞ்சலாற்றங்களொடு நட்பாயிருப்பதனிலொருயிர்விடுத்தநன்று, வஞ்சகருடன்கூடி வாழ்தலிற்றனிபோ யொருந்திடுஞ்சிறுமைநன்று, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (அக)

நிலையாதவை.

கொற்றவர்கள்ராஜுவமு மாறுநேருகி குளங்களின்தாசியுறவும், குணமில்லாநேசமும் பாம்பொடுபழக்கமுங் குலவுநீர்விளையாடலும், பற்றலார்தமதிடை வருந்துவிசுவாசமும் பழையதாயாதிநிணரும், பரதாரமாதரது போகமும்பெருகிவரு பாங்கானவாற்றுரவும், நற்றுமொருதுற்புத்தி சேட்கிறபேருறவு நல்லமதயானைநட்பும், நாவினல்லுறவுமொரு நாள்போலிரால்வகை ணம்பப்படாதுகண்டாய், மற்றுமொருதுணையில்லை நீதுணையெனப்பரவும் வானவர்கள்சிறைமீட்டவா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (அஉ)

நற்புலவர் தீப்புலவர்செயல்.

மிக்கானசோலையுங் குயிற்சென்றுமாங்கனி விருப்பமொடுதேடிஞடும், யிடைகருங்காகங்க ளெருக்கனியிருந்தாலும்வேப்பங்கனிக்குநாடும், எக்காலுங்கரிவண்டு பங்கேருகத்தினி லிருக்கின்றதேனைநாடும், எத்தனைசுகந்தவகை யுற்றாலுமுருள்வண்டி னந்தர்மலத்தைநாடும், தக்கோர்பொருட்பவை நயங்களெங்கேயென்றுதாம்பார்த்துக்கொள்வார், தாழ்வானவன்கண்ணிற் குற்றமெங்கேயென்று தமிழிலாராய்வர்கண்டாய், மைக்கரவிழிமாது தெய்வானையுங்குறவர் வள்ளியுந்தழுவுதலைவா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (அங)

தாழ்தற்பெருமை.

வேங்கைகள்பதுங்குதலு மாமுகிலொதுங்குதலும் விரிசிலைகுனிந்திடுதலும், மேடமதகன்றிடலும் யானைகளொடுங்குதலும் வெள்விடைகள துள்ளிவிழலும், மூங்கில்கள்வணங்குதலும் மேல்வரிணங்குதலு முனிவர்கணயந்துகொள்ளும், முதிர்படை யொதுங்குதலும்விளைஞர்களடங்குதலுமுதலினற்பயந்திடுதலும், ஆங்காரவுசாய்ந்துதலுமகிழ்வருடத்தலுமயற்குழல்சூடுபடுதலும், அம்புவியிலிவைகாரியங்களுக்கெல்லாமதனாலிளைப்புவருமோ, மாங்கனிக்காவானைவலமதுபுரிந்துதளர் மதகரிக்கிளையமுருகா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (அச)

தெய்வச்செயல்.

சோடாய்மரத்திற் புராரெண்டிருந்திடத் துறவுகண்டேவேடுவன், தோலாமலம்பெய்ய வேணுமென்றொருகணை தொடுத்துவில்வாங்கிநிற்க, ஊடாடிமேலே யெழும்பிடிலடிப்பதற் குலவுராசாளிகூட, உயரப்பரந்துகொண்டே திரியவப்போதுதைத்தசிலைவேடனடியில், சோடாகவவ்விஷந்தீண்டவேயவன்விழச் சிலையிற்றொடுத்தவாளி, சென்றிராசாளிமெய் தைத்துவிழவவ்விருசிறைப்புறாதாழ்ந்தவன்றோ, வாடாமலிவையெலாஞ் சிவன்செயலல்லாதுன்மனச்செயலினாலும்வருமோ, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (அரு)

பாடலியல்பு.

எழுத்தசைகள்சீர்தளைக ளடிதொடைகள்சிதையா திருக்கவேவேண்டுமப்பால், ஈரைம்பொருத்தமொடு மதுரமாய் பளபளப்பினியசொற்கமையவேண்டும், அழுத்தமிகுகுரளினுக் கொப்பாகவேபொருளடக்கமுமிருக்கவேண்டும், அன்பானபாவின மிசைந்துவரல்வேண்டுமுனலங்காரமுற்றதுரையில், பழுத்துளமுவந்தோசை யுற்றுவரல்வேண்டும் படிக்குமிசைகூடல்வேண்டும், பாங்காகவின்னவைபொருந்திடச்சொற்கவிதை பாடிச்சிறப்பென்பர்காண், மழுத்தினஞ்செங்கைதனில்வைத்தகங்காளனருண்மைந்தனெனவந்தமுருகா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (அசு)

விபூதிதரிக்கு முறைமை.

பத்தியொடுசிவசிவா வென்றுதிருநீற்றைப் பரிந்துகையாலெடுத்துப், பாரினில்விழாதபடி யண்ணாந்துசெவியொடு பருத்தபுஜமீதிலொழுக, நித்தமூவிரல்களா னெற்றியினமுந்தலுற நினைவாய்த்தரிப்பவர்க்கு, நீடுவினையணுகாது தேகபரிசுத்தமாய் நீங்காமநிமலனங்கே, சத்தியொடுநித்தம்விளையாடுவன்முகத்திலே தாண்டவஞ்செய்யுந்திரு, சஞ்சலம்வராதுபரகதியுதவுமிவரையேசத்தியுஞ்சிவனென்னலாம், மத்தினியமேருவென வைத்தமுதினைக்கடையுமான்மருகனைமுருகா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (அள)

விபூதிவாங்கு முறைமை.

பரிதனிலிருந்துவியல் சிவிகையிலிருந்துமுயர் பலகையிலிருந்துமிகவே, பாங்கானவம்பலந் தனிலேயிருந்தும் பருத்ததிண்ணையிலிருந்தும், தெளிவொடுகொடுப்பவர்கள் கீழ்நிற்கமேநின்று திருநீறுவாங்கியிடினும், செங்கையொன்றாலும்விரன் மூன்றாலும்வாங்கினுந் திகழ்தம்பலத்திலேனும், அரியதொருபாதையி னடக்கின்றபோதிலு மசுத்தனிலமானவதிலும், அங்கேதரிக்கினும் தந்திடிற்றள்ளினு மவர்க்குநரகென்பர்கண்டாய், வருவிழிமடந்தைகுற வள்ளிநாயகிதனை மணந்துமகிழ்ஜகநாதனே, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (அஅ)

இவ்வுருப்பாற் பயனில்லெனல்.

தேவாலயஞ்சுற் றிடாதகாலென்னகால் தெரிசியாக்கண்ணென்னகண், தினமுமேநின்கமல பாதத்தைநினையாத சிந்தைதானென்னசிந்தை, மேவாகமஞ்சிவ புராணமவைகேளாமல் விட்டசெவியென்னசெவிகாண், விமலனைவணங்காத சென்னியென்சென்னிபணி விடைசெயாக்கையென்னகை, நாவாரநினையேத்திடாதவாயென்னவாய் நற்றீர்த்தமூழ்காவுடல், நானிலத்தென்னவுடல்பர்வியாகியசன்னநண்ணிறுற்பலனேதுகாண், மாவாகிவேலைதனில் வருசூரன்மார்புருகவடிவேலைவிட்டமுருகா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (அகூ)

நற்பொருளொடு தீப்பொருள்பிறத்தல்.

கோகனகமங்கையுடன்மூத்தவள்பிறந்தென்ன குலவுமாட்டின்கணவர்தான், கூடப்பிறந்தென்ன தண்ணீரினுடனே கொடும்பாசியுற்றுமென்ன, மாகருணுமமுதினொடு நஞ்சம்பிறந்தென்ன வல்லிரும்பிற்றுருத்தான், வங்கேதபிறந்தென்ன தொடுமரந்தனின்மொக்குள் வளமொடுபிறந்தென்னவுண், பாதமிகுசென்னலொடு பதர்தான்பிறந்தென்ன பன்னுமொருதாய்வயற்றிற், பண்புறுவிவேகியொடு கயவர்கள்பிறந்தென்ன பலனேதுமில்லையன்றோ, மாகனகமேருவைச்சிலையெனவளைத்தசிவன் மைந்தனெனவந்தமுருகா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. ()

தன்னினத்தாலழிவு.

குலமானசம்மட்டி குறடுகைக்குதவியாய்க் கூரிரும்புகளைவெல்லும், கோடாலிதன்னுளே மரமதுநுழைந்துதன் கோத்திரமெலாமழிக்கும், நலமானபார்வைசேர் குருவியானதுவந்து நண்ணுபரவைகளையாக்கும், நட்புடன்வளர்ந்தகலை மானென்றுசென்றுதன்னவில்சாதிதனையிழுக்கும், வுளவுநற்குடிதனிற் கோளகனிருந்துகொண்டுற்றோரையீடழிப்பார், உளவனில்லாமலூரழியாதெனச்சொல்லுமுலகமொழிநிசமல்லவோ, வலமாகவந்தவனிடத்தினிற்கனிகொண்ட மதயானைதன்சோதரா, மயிலேறிவிளையாடு குகனே புலவயனீடு மலைமேவுகுமரேசனே. (கூக)

வீணுக்குழைத்தல்.

குயில்முட்டைதனைதென்று காக்கையடைகாக்குங்குணம்போலுமீக்களெல்லாம், கூடியேதாமுண்ண வேண்டுமென்றேதினங் கூடியத்தநறவுபோலாம், பயில்சோரருக்குப் பிறந்திடந்தாம்பெற்ற பாலனெனருட்கருதியே, பாராட்டிமுத்தமிட் டன்பாய்வளர்த்திடும் பண்பிலாபுருஷர்போலும், துயிலின்றநிதிகளைத் தேடியேயொருவர்பாற் றெட்டுத்தெரிந்திடாமல், தொகைபண்ணி வைத்திடுவர் கைக்கொண்டுபோகவரு சொந்தமானவர்வேறுகாண், வயிரமொடுசூரனைச்சங்காரமேசெய்து வானவர்க்குதவுதலைவா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (கூஉ)

இதுசேரினிதுபயன்படாதெனல்.

அழலுக்குள்ளேவிட்ட நெய்யும்பெருக்கான வாற்றிற்கரைத்தபுளியும், அரிதானகமரிற் கவிழ்த்திட்டபாலும்வரு மலகைகட்கிடுபூசையும், சுழல்பெருங்காற்றினில் வெடித்தபஞ்சும்மணற் சொரிநறும்பனிநீரினில், சொல்லெறியகாட்டுக் கெறித்தநிலவுங்கடல்சுழிக்குளேவிடுகப்பலும், விழலுக்கிறைத்திட்ட தண்ணீருமுகமாய் [illegible]சககளித்தபொருளும், வீணருக்கேசெய்த நன்றியும்பலனில்லை [illegible]ருத[illegible]விலென்பர்கண்டாய், மழலைப்பசுங்கிள்ளை முன்கைமலைமங்கை வண்ணக்குழந்தைமுருகா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (கூங)

கைவிடத்தகாதவர்.

அன்னைசுற்றங்களையு மற்றநாண்முதலா வடுத்துவரு பழையோரையும், அடுபகைவரிற்றப்பி வந்தவொருவேந்தனையு மன்பானபெரியோறையும், தன்னைநம்பினவரையு மேழையானவரையுஞ் சார்ந்தமறையோர்தம்மையும், தருணமிதுவென்றுநல லாபத்துவேளையிற் சரணம்புகுந்தோரையும், நன்னயமதாகமுன் னுதவிசெய்தோரையு நாளுந்தனக்குருதியாய், நத்துசேவகனையும் காப்பதல்லாதுகை நழுவிவிடலாகாதுகாண், மன்னயிலுமினியசெஞ்சேவலுஞ்செங்கைமலர் வைத்தசரவணபூபனே, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (கூச)

தகாதசெயல்.

அண்டிவருமுற்றார் பசித்தங்கிருக்கவே யன்னியர்க்குதவுவோரும், ஆசுதபுபெரியோர்செய் நேசத்தைவிட்டுப்பி னற்பரையடுத்தபேரும், கொண்டவொருமனையா ளிருக்கப்பரத்தையைக் கொண்டாடிமருவுவோரும், கூறுசற்பாத்திர மிருக்கமிதுதானமது குணமிலார்க்கீய்ந்தபேரும், கண்டுவருபுதியோரை நம்பியேபழையரைக் கைவிட்டிருந்தபேரும், கரிவாலைவிட்டுநரி வால்பற்றிநதிநீர் கடக்கின்றமரியாதைகாண், வண்டடர்கடப்பமலர்மாலிகாபரணமணி மார்பனேயருளாளனே, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (கூரு)

நல்லோர்முறை.

கூடியேசோதரர்கள் வாழ்தலாலுந்தருகுழந்தைபலபெருதலாலும், குணமாகவேபிச்சை யிட்டுண்டுமையாலுங்கொடும்பிதிர்க்கிடுதலாலும், தேடியேதெய்வங்களுக்கீதலும்தியாகங்கள்கொடுத்தலாலும், சிறியோர்கள்செய்திடும் பிழையைப்பொருத்துச் சினத்தைத் தவிர்த்தலாலும், நாடியேதாழ்வாய் வணங்கிடுதலாலுமிக நல்வார்த்தைசொல்லலாலும், நன்மையேதருமலாற் றாழ்ச்சிகள்வாராவிவை நல்லோர்கள்செயுமுறைமைகாண், வாடிமனநொந்து தமிழ்சொன் னநற்கீரன்முன் வாதுதவிசெய்தமுருகா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (கூகூ)

அடைக்கலங்காத்தல்.

அஞ்சலெனுநாயினுட றருவனசுமந்துமுன் னாற்றைக்கடத்துவித்தான், அடைக்கலமெனுங்கயற் காகனெடுமாலுட னருச்சுனன்சமர்புரிந்தான், தஞ்சமெனவந்திடு புறாவுக்குமுன்சிபி சரீரந்தனைக்கொடுத்தான், தடமதலைச்சிர கரிந்தமனைமுன்காக்கத் தசீது முதுகெலும்பளித்தான், இஞ்சொலுடனேபூத தயவுடையராயினோரெவருக்குமாபத்திலே, இனியதஞ்சீவனைவிடுத்தாகிலுங்காத் திரங்கிரட்சிப்பரன்றோ, வஞ்சகிரவுஞ்சமொடு தாருகன்சிங்கமுகன் வளர்சூரனுடல்கீண்டவா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (கூஎ)

யோக்கியா யோக்கியம்.

பாலினொடுதேன்வந்து சேரில்ருசியதிகமாம் பருகிநீர்சேரிலென்னும், பவளத்தினிடைமுத்தை வைத்திடிற்சோபிதம் படிகமணி நோக்கிலென்னும், மேலினியமன்னர்பால் யானைசேர்வதுகனதை மேஷமதுசேரிலென்னும், மிக்கானதங்கத்தி னவமணியுரிற்பெருமை வெண்கல்லழுத்திலென்ன, வாலிபமினார்களுளணிளையோர்கள் சேரினலம் வளைகிழவர்சேரிலென்னும், மருவுநல்லோரும் மாலிகை தரித்தமணி மார்பனேதெய்வானை வள்ளிக்குவாய்த்தகணவா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (௯௮)

பெரியோரியல்பு.

அன்னதானஞ்செய்தல் பெரியோர்சொல்வழிநின்ற லாபத்தின்வந்தபேருக், கபயங்கொடுத்திடுத னல்லினஞ்சேர்ந்திடுத லாசிரியன்வழிநின்றவன், சொன்னமொழிதவராது செய்திடுந்தாய்தந்தைதுணையடியருச்சனைசெயல், சோமடவில்லாமனுயிர் போகினும் வாய்மைமொழிதொல்புவியினாட்டிவிடுதல், மன்னரைச்சேர்ந்தொழுகல் கற்புடையமனைவியொடு வைக்கினுந்தாமரையிலை, மருவுநீரெனவுருத லிவையெலாமேலவர்க மாண்பென்றுரைப்பரன்றோ,வண்மையின்மேலிவர்க் கிவ்வுலசமொருநொடியில் வலமாகவந்தமுருகா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே.

நூலின்பயன்.

வன்னமயிலேறிவரு வேலாயுதக்கடவுண் மலைமேலுகந்தமுருகா, வள்ளிக்கொடிக்கினியவேங்கைமரமாகினோன் வானவர்கள்சேனாபதி, கன்னன்மொழிமையாடிருப்புதல்வனரன்மகன் கங்கைபெற்றருள்புத்திரன், கணபதிக்கிளையவொரு மெஞ்ஞானதேசிகக் கடவுளாவினன்குடியினான், பன்னரியபுல்வயலில்வாலகுமரேசர்மேற்பறிந்துகுருபாததாசன், பாங்கானதமிழாசிரிய விருத்தத்தினரைபாடலொருநூறுகோடி, நன்னயமதாகப்படித்தபேர்கேட்டபேர் நாடொருங்கற்றபேர்கள், ஞானயோகம்பெறுவர் பதவியாவும்பெறுவர்நன்முத்தியும்பெருவரே, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (௱)

குமரேசசதகம் முற்றிற்று.

மெய்கண்டதேசிகன் திருவடிவாழ்க.

புனு சுகந்த எண்ணை.



இந்த எண்ணையி லிருக்கும் பரிமளமானது மனோரஞ்சிதமலரைப்போல் பலவித வாசனையைக்கொடுக்கும் சிலவாசனை யெண்ணைகள் தலைக்குத் தடவிக்கொண்டால் சற்று நேரத்தில் மாறிவிடுவதுண்டு எங்கள் சுகந்த எண்ணையானது இன்றயதினம் தலைக்குத்தடவிக்கொண்டால் உங்கள் வழக்கம்போல் எத்தனைநாள்பொருத்து தலைமுழுகினாலும் அந்தமயிரை ஆற்றும்போது இதின் பரிமளத்தைப் பார்க்கவேணும் மயிரை வளப்பதற்கு எல்லாஎண்ணையைவிட இந்த சுகந்த எண்ணையே முதல்தர மென்று கண்டு பிடிக்கப்பட்டது.


1-டப்பியின் விலை ரூபா 1.

தபாற்கூலி அணா 5.

நாலு டப்பி ஓரேதடவை வாங்கினால் தபாற்கூலி மணியாடர்பீஸ் இந்த இரண்டு சிலவுங் கழித்து அனுப்புவோம்.

ரெயில்வே ரெகுலேட்டர் என்பது
உயர்ந்த கெடியாரமென்று யாவருக்கும் தெரியுமல்லவா.





ரெயில்வே ரெகுலேட்டர் என்னும் இந்த கெடியாரமானது மிகவும் உறுதியானதும் பளபளப்புள்ளதுமான ஒருவிதலோகத்தினால் செய்யப்பட்டு மின்பார்வையில் உயர்ந்த படிகக்கண்ணாடியினால் மூடிபோட்டதும் பின்புரத்தில் ரெயில்வே ஸ்டாம்பு,டை, டிரேட்மார்க்கு போட்டதுமான கெட்டியான கெடியாரம்.

மிகுந்த துல்லிதமான வெண்மையுடைய எனேமல் டையலும்பெருத்த முள்ளுகளும், டைம்ஸ் எண்களும், உள்ளாழ்ந்த வினாடியும், சாவியில்லாததாகவும் சரியான காலங்காட்டக் கூடியதென்றறிக.

இதின் விலை ரூபா 6 8 0

☞ இந்த கெடியாரத்துடன் அதிகமாக ஒரு கண்ணாடி பில்லையும், ஒருவில்லும் கொலுசும், வெல்வெட்பட்டு பெட்டியுடன் அனுப்பப்படும்.

மூன்று கெடியாரங்கள் ஒரேதடவையில் வாங்குவோருக்கு (ரோஜாப்புமொட்டு) என்னும் ஷோக்மோதிரம் ஒன்று ஷர்ட்பட்டன் ஒருசெட்டும் கமிஷன்கொடுக்கப்படும்.

ஷை கெடியாரம் தேவையானவர்கள் மின்பணம் பாதி அனுப்பினால்தான் கிடைக்கும்.

வித்தியாரத்நாகர அச்சுக்கூடத்தலைவர்

☞ பி. நா. சிதம்பரமுதலியார்.

பெரம்பூர் பாரெக்ஸ் போஸ்டு. மதராஸ்.